**கொத்மலை பிரதேச சபை - 2023**

---------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொத்மலை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொத்மலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 வேறு சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக் கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன..

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் பொழிப்பு அறிக்கையின் 1.2.3 ஆம் பந்தியின் அவதானிப்புக்கள் தவிர என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பூண்டுலோயா திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் பெறுமதி ரூபா. 19,780,200 இனால் குறைவாக கணக்கிடப்பட்டிஐந்தது. | 2024 இற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது அதனை சீர் செய்வதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) முன்னைய ஆண்டில் நிர்மாண வேலைகள் கையளிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படாத 03 திட்டங்களுடன் தொடர்பான ரூபா. 2,425,170 தொடர்ந்தும் கடன் கொடுத்தோர் மீதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த துடன் ஒரு திட்டத்தின் கடன் பட்டோர் மீதி ரூபா. 24,972 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 07 கணக்குகளின் மீதிகள் அவற்றுக்குரிய பயன்பாட்டுப் பதிவேடுகளுடன் ஒப்பிடுகையில் ரூபா. 5,181,533 இணங்காமையைக் காட்டியது. | எதிர்காலத்தில் சீர் செய்வதாக | இணங்காமைகளை இனங்கண்டு அவற்றை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இயந்திர உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா. 77,870 மீதியுடன் தொடர்பான கோவைகள் மற்றும் அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 இல் உருப்படிகளை இனங்கண்டு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | குறித்த கோவைகள் மற்றும் அட்டவணைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | |
| 49(அ) பிரிவு | பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையொன்றில் கட்டட அனுமதி எல்லையினுள் மேற்கொள்ளப்படும் 19 நிர்மாணங்களுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் நட்டஈடு செலுத்தாத ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருக்க வில்லை. | நொத்தாரிஸ் ஊடாக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நட்டஈடு செலுத்தாத ஒப்பந்தங்களை தயாரித்து பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| பிரிவு 154 (1) | தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 37 காணிகளின் மூலம் | ஒரு சில காணித் துண்டுகள் கொள்வனவு செய்யப்பட்டமை போன்ற காரணிகளின் | நிலுவை வருமானங்கள் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| விற்பனைப் பெறுமதியின் மீது அறவிடப்பட வேண்டிய 01 வீத வரி ரூபா. 440,264 அறவிடப்பட்டிருக்கவில்லை | அடிப்படையில் மீதமுள்ள காணிகளுக்கு 1வீத வரி செலுத்தப்படவில்லை என்பதாகவும் 2024.02.12 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் | எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,828,777 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,496,669 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியடலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 19,939,000 | 16,749,870 | 14,198,053 | 6,805,497 | 11,725,500 | 9,716,533 | 9,546,462 | 4,253,680 |
| (ii) | வாடகை | 11,629,000 | 9,790,886 | 9,443,236 | 3,393,610 | 7,532,800 | 1,509,818 | 1,194,568 | 3,045,960 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 14,398,500 | 13,194,254 | 13,194,254 | | 11,291,000 | 10,649,464 | 10,649,464 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 95,269,000 | 88,648,333 | 95,232,603 | 13,452,356 | 81,555,000 | 15,294,335 | 16,537,508 | 6,584,270 |
| | மொத்தம் | 141,235,500 | 128,383,343 | 132,068,146 | 23,651,463 | 112,104,300 | 37,170,150 | 37,928,002 | 13,883,910 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி மற்றும் வரி** | | |
| மீளாய்வாண்டின் ஜனவரி 01ஆம் திகதியன்று சபையின் மூலம் அறவிடப்பட வேண்டியிருந்த வீதவரி மற்றும் வரி நிலுவை ரூபா. 3,035,563 ஆகவிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று அதில் ரூபா. 1,516,126 அதாவது சுமார் 50 வீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இந் நிலுவையினுள் 05 வருடங்களுக்கும் கூடிய காலமாக 293 வளாகங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா. 837,851 மீதியும் 01 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் 1152 வளவுகளிருந்து அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா. 263,879 மீதியும் காணப்பட்டது. | 05 வருடங்களைத் தாண்டிய நிலுவை வீதவரி தொடர்பாக சட்ட நடவடிக்கை மூலம் அறவிடுவதற்கான நடவடிக்கை எதிர்காலத்தில் எடுப்பதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| **(ஆ) வேறு வருமானங்கள்** | | |
| i. மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதியன்று காணப்பட்ட ரூபா. 869,675 நீர்க்கட்டண நிலுவையில் மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று ரூபா. 631,610 அதாவது 72 வீதம் நிலுவையாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று காணப்பட்ட நிலுவை மீதியினுள் 01 வருடத்திற்கும் குறைவான மற்றும் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்துடன் தொடர்பான 85 கூறுகளிலிருந்து ரூபா. 1,545,634 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீர் கட்டணத்தை அறவிடுவதற்கு தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக | - மேற்படி - |
| ii. சுற்றுலா அதிகார சபையின் அனுமதி பெற்ற 03 ஹோட்டல்களிலிருந்து 01 வீத வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2024 முதல் கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| iii. மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதியன்று காணப்பட்ட ரூபா. 2,971,460 முச்சக்கர வண்டிக் கட்டண நிலுவையில் மீளாய்வாண்டிற்கான அறவீடு 36 வீதம் என்ற குறைந்த மட்டத்திலே காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரை பட்டியலிடப்பட்ட ரூபா. 2,286,000 இல் ரூபா. 830,550 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அதுவும் 36 வீதம் என்ற குறைந்த மட்டத்திலே காணப்பட்டது. | நிலுவைகளை அறவிடுவுதற்காக வழக்குத் தொடர்வதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாக | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (இ) **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதியன்று பெற வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா. 10,863,360 ஆகவிருந்தது. | நிலுவை மீதிகளை எதிர்காலத்திலே அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சுபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ''சிறுவர்களைப் பாதுகாப்போம்'' திட்டத்தின் மூலம் மல்தெனிய மற்றும் பூண்டுலோயா ஆகிய இரண்டு நூலகங்களுக்கும் கற்றல் நிலையங்களை நடாத்திச் செல்வதற்குத் தேவையான காகிதாதிகள், மடிக்கணினி, பல்லூடக வசதிகள், அச்சப் பிரதி இயந்திரம் மற்றும் காரியாலய உபகரணங்கள் அன்பளிப்பாக முன்னைய ஆண்டின் ஜனவரி 08ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதி வரை குறித்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படாத நிலையில் கிடைக்கப்பெற்ற காரியாலய உபகரணங்கள் வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. | தற்பொழுது பிரதான அலுவலக நூலகத்தின் நூலக பொறுப்பாளரின் பொறுப்பில் அக் கணினிகள் காணப்படுவதாக | செயற்றிட்டத்தினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) துனுகேதெனிய கிராம மத்தியிலுள்ள குடிநீர் திட்டங்களுக்காக 2021 முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் 03 திட்டங்களின் கீழ் ரூபா. 4.000.000 செலவிடப்பட்டிருந்த போதும், நீர் இயந்திரத்திற்கான முத்தரப்பு மின்னிணைப்பு பெறப்படாமை காரணமாக திட்டத்தினை செயற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | மின்சார மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக | திட்டத்தினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத குறைப் பயன்பாட்டுக்கு உட்பட்ட ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சுபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று பெறுமதி மதிப்பிடப்படாத 07 இயந்திரங்கள், 04 தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் 02 வாகனங்கள் ஆகியன 01 தொடக்கம் 21 வருட கால இடைவெளியினுள் பயன்படுத்தப் படாமலும் குறைப் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டும் காணப்பட்டன. | 2024 இன் போது தேவையான நடவடிக்கை எடுப்பதாக | பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நூலகக் கட்டடங்கள், கடைகள் மற்றும் சபையின் வீடுகள் உள்ளிட்ட 14 கட்டடங்கள் பராமரிக்கப்படாது அழிந்து போவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவக் குழுவின் மூலம் பெறப்படும் அபிப்பிராயத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | கட்டிடங்கள் முறையாக பராமரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 22 (1) மற்றும் (2) விதிமுறைகளின் அடிப்படையில் தொடர் பிரிவிற்கு உட்படுத்தப்பட்டிருந்த காணியொன்றின் 03 ஏக்கர் 01 ருட் 19.57 பேர்ச் பரப்புள்ள காணியின் உரிமை கையேற்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த உரிமைப்பத்திரத்தின் பதிவுசெய்யப்பட்ட பிரதியை விரைவில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | காணிகளின் உரிமை உறுதிப்படுத்தப்படல் வேண்டம். |
| (இ) | சபை பயன்படுத்திய 05 வாகனங்கள் பாவனைக்கு உகந்த நிலையில் இல்லாதிருந்ததுடன், இதில் 03 வாகனங்களை பழுதுபார்ப்ப தற்காக அனுப்பப்பட்டு 01 முதல் 2 ½ வருடங்கள் கடந்திருந்த போதும், இதுவரை திருத்தம் செய்து பெறப்பட்டிருக்கவில்லை. 02 வாகனங்களின் உரிமை சபைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிமையினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | உரிமை கையேற்கப்பட வேண்டியதுடன் திருத்தம் செய்து பராமரிக்கப்படல் வேண்டும். |

## 3.4 வெளிப்படையான முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஹெல்பொட உப அலுவலகத்தில் சிற்றூழியர் பதவியில் கடமை புரியும் ஊழியர் ஒருவர் உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள வியாபார நிலையங்களிலிருந்து பற்றுச்சீட்டு வழங்காது அனுமதிக்கட்டணமாக ரூபா. 317,559 அறவீடு செய்து சபை நிதியத்தில் வைப்புச் செய்திருக்கவில்லை. இது தொடர்பாக நி.பி 104 (3) மற்றும் 104 (4) அடிப்படையிலான விசாரணைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் முடிவுற்றிருக்கவில்லை. | மோசடி தொடர்பில் குறித்த ஊழியர் தொடர்பான ஆரம்ப கட்ட விசாரனைகள் நடைபெற்று வருவதாக | நிதிக்கோவையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று சபைக்கான அனுமதிக்கப்பட்ட பணிக்குழுவில் 10 பதவிகளுக்கான 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக | வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2004 ஒக்டோபர் 11 திகதிய 118 ஆம் இலக்க வரவு செலவு அறிக்கை சுற்றறிக்கையின் 1.1.7 பிரிவின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற 09 மாதம் தொடக்கம் 01 வருட கால இடைவெளியினுள் அறவிடப்பட வேண்டிய ஐந்து ஊழியர்களது ரூபா. 663,810 கடன் நிலுவையினை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்பொழுது குறித்த ஊழியர்களது கடன் நிலுவைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (இ) | 2015 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ள இரண்டு ஊழியர்களின் ரூபா. 186,110 கூட்டுத்தொகையான கடன் நிலுவை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஹட்டன் கல்வி வலயத்தின் ஊடாக அதை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | கடன் நிலுவைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |